# வகுப்பறையில் உகந்த கட்டமைப்பு, மனம் மற்றும் உணர்ச்சி சார்ந்த [Emotional Environment] சூழ்நிலைகளை மேம்படுத்துதல்

## 1. அறிமுகம்

கல்வி (Education) என்பது குழந்தைகளை, உடல், மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புகளை வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் வருகிறது. ஆனால் குழந்தைப் பருவத்தில் கற்கும் போது முழுமையான பரிமானம் அடைந்து முழுமையான மனிதனாகவும், சமுதாயத்திற்கு உதவிகளை அளிக்கும்படியும் மாற்றம் அடைகின்றான். "கல்வி என்பது பிழைப்புக்கு வருவாய் தேடும் ஒரு வழி முறை அல்லது செல்வம் ஈட்டும் ஒரு சாதனம் மட்டும் அன்று அது மெய்யை தேடுவதற்கும் அறநெறியைப் பயில்வதற்கும் மனித ஆன்மாகவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறை" என்கிறார் விஜயலட்சுமி பண்டிட் அவர்கள்.

ஒரு நாட்டின் நம்பிக்கையாக கருதப்படுகிறவர்கள் மாணவர்கள் மட்டுமே கல்வியின் நோக்கம் என்ன என்று தெரியாமல், பெற்றோர்கள் ஒரு பக்கம், ஆசிரியர் ஒரு பக்கம், இதனால் ஒரு வித பயத்தையும், குழப்பத்தையும் அடைந்து, இதன் உச்சகட்டமாக மனஅழுத்த நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதற்கு குடும்பம், நண்பர்கள், எண்ணங்கள், சமுதாயம், ஊடகம் போன்ற பல காரணிகள் இருக்கலாம்.

"அச்சமற்ற குழந்தை மட்டுமே கற்றலில் ஈடுபட முடியும். வகுப்பறைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதே அச்சத்தைப் போக்கும், விதிகளைக் கடக்கும் வகுப்பறையே சுயகட்டுப்பாட்டை போதிக்கும்", என்கிறார் மூத்த கல்வியாளர் எஸ்.எஸ். ராஜகோபாலன். வகுப்பறை செயல்பாட்டில் மிக முக்கிய பங்கு வகிப்பவர் ஆசிரியர். ஒரு சிறந்த ஆசிரியரால் மட்டுமே வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை ஒழுங்கான முறையில் செயல்படுத்த முடியும். ஒரு ஆசிரியர் என்பார் தனது தொழிலில் விருப்ப முடையவராக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமானதொன்றாகும். அவர் பொறுப்புணர்ச்சி கொண்டவராகவும் மாணவர்களது முன்னேற்றத்தில் கரிசனை கொண்டவராகவும் மாணவர்களிடத்தில் கல்வியில் விருப்பை ஏற்படுத்துபவராகவும் இருக்க

வேண்டும். எவ்வளவு பட்டங்கள் ஒரு ஆசிரியர் பெற்றிருக்கிறார் என்பதை விட மாணவர்களுக்கு புரியுமாறும் அவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்குமாறும் கற்பிப்பவரே நல்லாசிரியராவார். கற்கும் முறைகளைத் திட்மிட்டு செயற்படுத்துபவராகவும் மாணவர்களது சிந்தனையை தூண்டுபவராகவும் கல்வியின் மூல வளங்களை சேகரித்து பாதுகாப்பவராகவும் மாணவர்களது தேவைகளையும் கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பாளராகவும் திகழ வேண்டும். மகிழ்ச்சிகரமான வகுப்பறைச் சூழலை ஏற்படுத்துவதே ஒரு ஆசிரியரின் மிக முக்கிய கடமையாகும். கேட்பதையெல்லாம் வாங்கித்தரும் பெற்றோர், வீட்டில் எல்லையற்ற சுதந்திரம், கையில் செல்போன் என்று கட்டற்ற மனநிலையில் குழந்தைகள் வளர்கிறார்கள். இன்னொரு முக்கியப் பிரச்சினை மதிப்பெண் எல்லை. அதிக மதிப்பெண் பெற முடியாத மாணவன் மோசமானவனா? "ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகிறது" என்கிறது கோத்தாரிக் கல்விக் குழு. தரமான கல்வியை அளித்தாலே மாணவர்களுக்கு உயர்ந்த மதிப்பெண் பெறுவது சாத்தியமானதே. "மதிப்பெண்ணே மாணவர் அளவுகோல்", என்ற மாயையை மாற்றி, மன அழுத்தத்தை மாணவருக்குள் உற்பத்தி செய்யும் தேர்வு முறைக்கு விடை கொடுத்து, அறிவு தேடலை நோக்கிய புதிய பயணத்தை நமது கல்வித்துறை இப்புதிய கலைத்திட்டத்தின் கீழ் தொடங்கியிருக்கிறது. தற்பொழுது உள்ள காலக்கட்டத்தில் ஆசிரியர் என்பவர் கற்பிப்பவர் என்பதைவிட கற்க வழிகாட்டுபவர் எனலாம். மாணவர்களின் கல்வி உணர்வுக்கும் ஊக்கத்துக்கும் முக்கிய துாண்டுகோலாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்பது அதிவீர இராம பாண்டியரின் வெற்றி வேற்கை ஆகும். அறிவே தெய்வம் என்பவர் அறிஞர் பெருமக்கள் அறிவைப் போதிக்கும் ஆசானும் தெய்வமாக கருதப்படுகிறான். மாணவர்கள் தொடர்ந்து படித்து முன்னேற, ஆசிரியர்கள் தங்களிடம் பயிலும் மாணவர்களின் கல்வியில் அக்கறைக் காட்ட வேண்டியது அவசியம் ஆகும். ஒரு மாணவனுக்கு கல்வி பயில ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பது ஒரு ஆசிரியரின் கடமையாகும்.

"கண்ணுடையவர் என்பவர் கற்றோர்,

முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்ற குறளுக்கு ஏற்ப பகுத்தறிவையும் அறிவு சிந்தனையையும் சமூகத்திற்கு உருவாக்கிட ஆசிரியர் பணி மிகப்பெரிய பங்கை வகிக்கின்றது. இந்த உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களைச் சமூகம் பெருமளவில் நம்பியிருக்கிறது. மாணவர்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு அன்பு கலந்த மனித நேயத்தோடு அவர்களுக்கு உகந்த கட்டமைப்பு, மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக முன்னேற்றுவதே ஒரு ஆசிரியரின் இன்றியமையாத தேடலாக இருக்க வேண்டும். எத்தனை ஆண்டுகள் வேலை செய்தோம் என்பது முக்கியமல்ல. மாறாக எத்தனை மாணவர்களை முன்னேற்றியுள்ளோம் என்பதே முக்கியம். தன்னிடம் கற்ற மாணவன் உயர்ந்த நிலையில் வாழ்கிறான் என்று கேள்விப்படும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அந்த நல்ல வார்த்தைகளை செவிமடுப்பது ஒன்றே ஒரு நல்ல ஆசிரியருக்கு கிடைக்கும் அரிய பரிசாகும். எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிக்கள் ஆசிரியர்கள் என்றால் அதற்கு மாற்று கருத்து இருக்க முடியாது. தலைசிறந்த மாணவனை உருவாக்குவதற்கு ஆசிரியர்களே தங்களது பொன்னான காலத்தை மாணவர்களுக்கு அர்ப்பணிக்கிறார்கள்.

"மன்னும் மாசறக் கற்றோனும்

சீர்தூக்கின்

மன்னனின் கற்றோன்

சிறப்புடையன்

மன்னற்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை

கற்றோற்குச் சென்ற கிட மெல்லாம் சிறப்பு".

என்ற மூதுரைக்கு ஏற்ப போற்றுதலுக்குரிய ஆசிரியர் துறையை தேர்வு செய்திருக்கும் நண்பர்களுக்கு இப்பயிற்சி கட்டகம் வகுப்பறையில் உகந்த கட்டமைப்பு, மனம் மற்றும் உணர்ச்சி சார்ந்த சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

## 2. வகுப்பறையில் கட்டமைப்பு [Physical Environment] சார்ந்த சூழ்நிலையை மேம்படுத்துதல்

மாணாக்கரின் விளையுறுவில் [Outcomes] பள்ளிக்குப் பள்ளி இடத்திற்கு இடம் 12% முதல் 18% வரை வேறுபாடு [NCERT, 1995] காணப்படுகிறது. இவ்வேறுபாட்டிற்கு மாணாக்கரின் குடும்ப மற்றும் சமுதாய பின் புலத்தை விட பள்ளி மற்றும் வகுப்பறைக் காரணிகள் அடிப்படையாக அமைந்துள்ளன. வகுப்பறை சூழலை மேம்படுத்துவது என்பது ஒரு அழகு மாற்றம் மட்டுமல்ல, ஆசிரியர் மாணவர்களை இணைக்கும் ஒரு உள்ளார்ந்த மாற்றம்.

### 2.1 சூழ்நிலை -1

விழுப்புரம் மாவட்டத்தில் ஓர் ஆச்சரியப் பள்ளி: ஆங்கிலத்தில் அசத்தும் கந்தாடு அரசு தொடக்கப் பள்ளி மாணவர்கள்

ஆங்கில மொழி மோகத்தால் ஏழைகளும் வட்டிக்கு கடன் வாங்கி தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளை சேர்க்கும் காலம் இது. ஆனால், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்கூட, விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியத்தில் உள்ள கந்தாடு அரசு தொடக்கப் பள்ளியில் சேர்ந்து வருகின்றனர்.

ஆங்கிலச் சொற்களை மாணவர்கள் மிக நேர்த்தியாக உச்சரிக்கும் விதம், ஆங்கில வாக்கியங்களை அவர்கள் வாசிக்கும் வேகம் ஆகியவற்றைப் பார்க்கும் அனைவரும், இந்தப் பள்ளியில் தரமான முறையில் ஆங்கிலக் கல்வி போதிக்கப்படுவதை அறிந்து பாராட்டுகிறார்கள்.

ஆங்கிலத்தை முறையாகப் போதிக்க இந்தப் பள்ளியின் ஆசிரியர் எஸ்.எம்.அன்னபூர்ணா மேற்கொண்ட முயற்சிகள், தமிழகத்தின் ஏராளமான பள்ளிகளுக்கு இன்று முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. அவரது ஆங்கில

வகுப்பறை நிகழ்வுகள் தொடர்பான வீடியோக்களை சமூக ஊடகங்களில் பல்லாயிரக்கணக்கானோர் பார்த்து வியந்து பாராட்டுகின்றனர்.



கந்தாடு பள்ளியில் மாற்றத்தை உருவாக்கியது எப்படி என்பது பற்றி ஆசிரியர் அன்னபூர்ணா கூறியதாவது:

தொடக்கப் பள்ளி ஆசிரியராக 2004-ம் ஆண்டில் பணியில் சேர்ந்தேன். பாடம் நடத்துவது, மாணவர்களுடன் உரையாடுவது என வகுப்பறையில் நுழைந்து, வெளியே செல்வது வரை ஆங்கிலத்தில் மட்டுமே பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். 2009-ல் ஒருநாள் மாணவர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொள்வதை கேட்க நேர்ந்தது. அவர்கள் மிகச் சரியான உச்சரிப்புடனும், பிழையின்றியும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தனர். அதைக் கேட்ட எனக்கு மிகப்பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த நிகழ்வுதான் திருப்புமுனை என்றுகூட சொல்லலாம்.

பல நாட்களாக, பல மாதங்களாக நான் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடி வந்தது மாணவர்களிடம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை உணர முடிந்தது. ஆங்கிலம் பற்றிய முறையான பயிற்சி தொடர்ச்சியாக

இருந்தால், எப்படிப்பட்ட பின்தங்கிய சமூக பின்புலத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கும் ஆங்கிலம் உட்பட அனைத்து பாடங்களிலும் தரமான கல்வியை வழங்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

அதுமுதல், மிகுந்த ஆர்வத்துடன் கற்பிக்கத் தொடங்கினேன். ஆங்கிலச் சொற்களை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பதற்கு ஐபிஏ (International Phonetic Alphabet) எனப்படும் சர்வதேச விதிமுறைகள் உள்ளன. அந்த விதிமுறைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கிறேன்.

இதற்காக ஒவ்வொரு பாடத்தில் இருக்கும் சொற்களையும் தொகுத்து, அவற்றை எந்த முறையில் ஒலிக்க வேண்டும் என்பது பற்றி பயிற்சி அளிக்கிறேன். அந்த வகையில் இதுவரை 10 ஆயிரம் சொற்கள் கொண்ட தொகுப்பை உருவாக்கியுள்ளேன்.

ஒவ்வொரு சொல்லையும் பள்ளியின் ஸ்மார்ட் வகுப்பறையில் காட்சி வடிவில் முதலில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்கிறேன். ஒரு சொல் கொண்ட சிலைடில், அந்த ஆங்கிலச் சொல் முதலில் இருக்கும். அதன் கீழே, அதை எவ்வாறு ஒலிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறை (Transcription) இருக்கும். அதன் கீழே அந்த ஆங்கில சொல்லுக்கான தமிழ் அர்த்தம் இடம்பெற்றிருக்கும். அந்த சொல்லோடு தொடர்புடைய ஒரு படம் இருக்கும். கடைசியாக அந்தச் சொல்லை ஒலிக்கும் எனது குரல் கேட்கும்.

ஒவ்வொரு ஆங்கிலப் பாடத்தை நடத்தும் முன்பும், அந்தப் பாடத்தில் உள்ள எல்லா சொற்களையும் இவ்வாறு வாசிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி தருகிறேன். அதன் பிறகு, அந்தப் பாடத்தின் கருத்துகளை மையமாகக் கொண்டு உரையாடல்களை உருவாக்குகிறோம். உரையாடல்கள் நாடக

வடிவம் பெறுகின்றன. நாடகம் முடிந்த பிறகு, பார்த்த காட்சிகள், கேட்ட உரையாடல்கள் பற்றி பல்வேறு கேள்வி – பதில்கள் இடம்பெறும்.

இதெல்லாம் முடிந்த பிறகுதான் பாடப் புத்தகத்தை கையில் எடுத்து, வழக்கமான முறையில் கற்பித்தல் பணி தொடங்கும். ஏற்கெனவே அந்தப் பாடத்தில் இடம்பெற்றிருக்கும் சொற்கள், பாடத்தில் வலியுறுத்தப்படும் கருத்துகள் போன்றவை மாணவர்களுக்கு நன்கு அறிமுகம் ஆகியிருப்பதால், அந்தப் பாடத்தின் மூலம் பெறவேண்டிய அடைவுத் திறனை மாணவர்கள் மிக எளிதாகப் பெற்றுவிடுவார்கள்.

இவ்வாறு தனது கற்பித்தல் உத்திகள் பற்றி விவரித்தார் அன்னபூர்ணா. அவர் தனது சொந்தப் பணத்தில் ரூ.1 லட்சத்து 75 ஆயிரம் செலவு செய்து, பள்ளியில் வண்ணமயமான ஸ்மார்ட் வகுப்பறையை உருவாக்கியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, “எங்கள் வகுப்பறை நடவடிக்கைகள் பற்றிய வீடியோக்களை முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் இந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் வெளியிட்டேன். உள்ளூர் மட்டுமின்றி வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் மத்தியில்கூட இவை வைரலாகப் பரவும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அடுத்த ஓரிரு நாட்களிலேயே பாராட்டுகள் குவிந்தன. ஏராளமானோர் தொடர்பு கொண்டு பேசினார்கள்.

இதனால் கிடைத்த ஊக்கத்தில், மாணவர்களுக்கு மேலும் ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன். அப்போதுதான் ஸ்மார்ட் வகுப்பறையின் அவசியம் பற்றி உணர்ந்துகொண்டேன். கடந்த மார்ச் மாதத்தில் பள்ளியின் ஒரு கட்டிடத்தில் வண்ணம் அடித்து, ஓவியங்கள் வரைந்து அழகாக்கினோம். தொடுதிரை வசதி கொண்ட ஸ்மார்ட் போர்டு, புரொஜக்டர், வட்ட வடிவ மேஜைகள், நாற்காலிகள் போன்றவற்றை வாங்கி,

அழகான வகுப்பறையை உருவாக்கியிருக்கிறோம். எங்கள் பணியைப் பாராட்டும் விதமாக ஏராளமானோர் பல உதவிகளை செய்கின்றனர். அவர்கள் உதவியோடு மாணவர்களுக்கு பல வசதிகளை செய்து வருகிறோம்'' என்றார்.

பள்ளியின் வளர்ச்சி பற்றி தலைமை ஆசிரியர் எஸ்.பிரேமலதா கூறும்போது, ''கந்தாடு அரசு தொடக்கப் பள்ளியில் தற்போது 174 மாணவர்கள் பயில்கின்றனர். இந்த ஆண்டு 5-ம் வகுப்பு முடித்து 25 மாணவர்கள் வெளியே சென்றனர். 48 மாணவர்கள் புதிதாக சேர்ந்துள்ளனர். புதிய மாணவர்களில் 1-ம் வகுப்பு மட்டுமின்றி, தனியார் பள்ளிகளில் இருந்து வெளியேறி 4, 5-ம் வகுப்புகளிலும் அதிக அளவில் சேர்ந்துள்ளனர்.

மரக்காணம் ஒன்றியத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் எங்கள் பள்ளிக்கு வருகை தந்து வகுப்பறை சூழலையும், கற்பிக்கும் உத்திகளையும் நேரில் பார்த்துச் செல்கின்றனர். தற்போது ஆங்கிலம் மட்டுமின்றி, பிற பாடங்களையும் இதேபோன்று ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். வரும் ஆண்டுகளில் மாணவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்'' என்றார். பள்ளியின் ஒரு கட்டிடத்தில் ஸ்மார்ட் வகுப்பறை செயல்பட்டாலும், பிற கட்டிடங்கள் மிகவும் பழமையானதாகவும், இடியக் கூடிய அபாயத்திலும் உள்ளன. இந்தக் கட்டிடங்களை இடித்துவிட்டு, உரிய காலத்தில் புதிய கட்டிடங்களை அரசு கட்டிக் கொடுத்தால், இந்தப் பள்ளியின் வெற்றிப் பயணம் மேலும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

## 2.2 சூழ்நிலை -2

30 கம்ப்யூட்டர்கள்; 2 ஏ.சி. வகுப்பறைகள்: ஹைடெக் வசதிகளுடன் இயங்கும் குக்கிராமப் பள்ளி

முப்பது கம்ப்யூட்டர்களுடன் அதி நவீன ஆய்வகம்; குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வகுப்பறைகள்; ஸ்மார்ட் கிளாஸ் வசதிகள்; ஜெராக்ஸ், பிரின்டர்,

ஸ்கேனர் கருவிகள், வகுப்பறைகளில் திரும்பிய பக்கமெல்லாம் வண்ணமயமான அழகான சுவரோவியங்கள், ஹைடெக் கழிவறை…

இப்படியாக சர்வதேச தரத்தில் விளங்குகிறது கீழப்பாலையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றி யத்தில் இந்த அரசுப் பள்ளி உள்ளது.

1000 பேருக்கும் குறைவான மக்கள் தொகைக் கொண்ட ஒரு குக்கிராமம் கீழப்பாலையூர். பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். விவசாய கூலி வேலைதான் பிரதான தொழில். இதிலிருந்தே அந்த கிராம குழந்தைகளின் கல்வி நிலை எந்த அளவுக்கு இருந்திருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

தொடக்கத்தில் இந்த ஊரில் தொடக்கப் பள்ளி மட்டுமே இருந்தது. இங்குள்ளவர்கள் 5-ம் வகுப்பை முடித்து விட்டு 6-ம் வகுப்பில் சேர **6** கி.மீ.தொலைவில் உள்ள கம்மாபுரம் செல்ல வேண்டும். மணிமுத்தாறு தண்ணீரைக் கடந்து சென்றுதான் பள்ளிக்கு செல்ல முடியும். பருவமழைக் காலங்களில் ஆற்றில் வேகமாக தண்ணீர் ஓடும். ஆகவே, அந்த நாட்களில் மாணவர்கள் பள்ளிக்கு செல்ல மாட்டார்கள். ஆற்றை கடப்பது ஆபத்தானது என்பதால் பெரும்பாலான மாணவர்கள் 5-ம் வகுப்புக்கு மேல் படிப்பதில்லை. .

இதனால் கீழப்பாலையூரிலேயே நடுநிலைப் பள்ளி தொடங்க வேண்டும் என்று இந்த கிராம மக்கள் நீண்ட காலமாக போராடி வந்தனர். இதன் பயனாக **2012**-ம் ஆண்டில் கீழப்பாலையூர் பள்ளி நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

இந்த சூழலில்தான் கீழப்பாலையூர் பள்ளியில் பள்ளி மேம்பாட்டு பணிகளை தொடங்கினார் இடைநிலை ஆசிரியர் ப.வசந்தன். இந்தப் பள்ளியின்

ஒட்டுமொத்த முகமும் மாறியதற்கு இவர்தான் பிரதான காரணம். கீழப் பாலையூரில் இந்த மாற்றங்கள் எவ்வாறு சாத்தியமானது என்பது பற்றி வசந்தன் விவரித்தார்.

“ஏழைகள் என்பதாலேயே வசதிகள் நிறைந்த வகுப்பறை எங்கள் மாண வர்களுக்கு வெறும் கனவாகி விடக் கூடாது என விரும்பினேன். தலைமை யாசிரியர் மற்றும் சக ஆசிரியர்கள் கூடி பேசினோம்.

நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி யதால் புதிய கட்டிடம் கிடைத்தது. குழந்தைகள் விரும்பும் வகையில் வகுப்பறை சூழலை மாற்ற முடிவு செய்தோம். முதலில் அழகான வண்ண ஓவியங்களைத் தீட்டினோம். ஒரு வகுப்பறையில் குளிர்சாதன வசதியை ஏற்படுத்தினோம். வயர்லெஸ் மைக் மற்றும் ஸ்பீக்கர்கள் பொருத்தினோம். இதற்கு ரூ.90 ஆயிரம் வரை செலவானது. எனது சொந்த பணத்திலும், நண்பர்கள் சிலரது உதவியாலும் இதனை செய்ய முடிந்தது.

இந்த வகுப்பறை காட்சிகளை எனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டேன். இதனைப் பார்த்து உள்ளூர் மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் இருந்து பலர் பாராட்டினார்கள். ஏராளமானோர் பள்ளிக்கு மேலும் பல உதவிகளைச் செய்ய முன்வந்தனர். என்னுடைய நண்பர்கள், உறவினர்களும் உதவி செய்தனர். இதன் காரணமாக இன்னொரு வகுப்பறையில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தினோம்.

எங்களது இந்த பணியைப் பாராட்டி, ஜப்பானில் வசிக்கும் தமிழ் நண்பர்கள் தொடர்பு கொண்டனர். முழுமதி அறக் கட்டளை என்ற அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் அளித்த ரூ.2 லட்சம் நிதி யுதவியால் பள்ளி கழிவறையை மிக நவீன முறையில் கட்டியுள்ளோம்.

உள்ளூர் மட்டுமின்றி இப்போது வெளியூர்களில் இருந்தும் மாண வர்கள் கீழப்பாலையூர் பள்ளியில் சேர்ந்துள்ளனர். உயர்நிலை, மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்குதான் அரசு இலவச சைக்கிள்களை வழங்கு கிறது. நடுநிலைப் பள்ளிக்கு இல்லை. இந்த சூழலில் எங்கள் மாணவர்களுக்கு சைக்கிள் **கிடைத்தால் வசதியாக இருக்கும் என பேஸ்புக் பக்கத்தில்** தெரிவித்திருந்தேன். இதனைப் படித்த ஜெர்மனியில் வசிக்கும் நண்பர் ஒருவர் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கியுள்ளார். ஒவ்வொரு மாண வருக்கும் தனித்தனி பாதுகாப்பு பெட்டகங்கள் வழங்கியுள்ளோம். வீட்டு பாடங்களுக்கு தேவையான புத்தகம், நோட்டு தவிர மற்றவற்றை மாண வர்கள் இங்கேயே வைத்துவிட்டுச் செல்கிறார்கள்.

அதிநவீன பிரின்டர், ஸ்கேனர், ஜெராக்ஸ் இயந்திரங்கள் உள்ளன. மாணவர்களுக்கு தரமான யூனி்ஃபார்ம், ஷூ வழங்குகிறோம். எல்லாமே நண் பர்கள் உதவிதான். இவர்களில் பலரை ஒருமுறைகூட நேரில் பார்த்தது இல்லை.



எல்லாவற்றுக்கும் மேலாக 30 கம்ப்யூட்டர்களுடன் கூடிய மிக நவீன ஆய்வகத்தை அமைத்துள்ளோம். ஏற்கெனவே அரசு வழங்கிய 6

கம்ப்யூட்டர்கள் இருந்தன. தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் 24 கம்ப்யூட்டர்கள், 48 நாற்காலிகள், 24 மேசைகள், 3 இன்வெர்ட்டர்கள் வழங்கினார்கள். இன்டர்நெட் வசதியும் கிடைத்தது. மிகப் பெரும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் உள்ளது போல மிக நவீன தோற்றத்துடன் கம்ப்யூட்டர் ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் இதன் திறப்பு விழா நடைபெற உள்ளது.

கீழப்பாலையூர் பள்ளியில் உள்ள வசதிகளை இவ்வாறு வசந்தன் வரிசைப் படுத்திக்கொண்டே செல்கிறார்.

இந்தப் பள்ளியை இவ்வாறு மேம்படுத்த தனது தலைமையாசிரியர் கே.தரணி, சக ஆசிரியர்கள், ஊர்ப் பொது மக்கள் கொடுத்த ஆதரவும், ஊக்கமும் தான் முக்கிய காரணம் என அவர் தெரிவிக்கிறார்.

இதுபற்றி தெரிவித்த தலைமையாசிரியர் கே.தரணி, “அரசு பள்ளி ஆசிரியர்கள் நினைத்தால் எதையும் செய்ய முடியும். அதற்கு எங்கள் பள்ளியே சாட்சி” என்றார்.

இந்த சூழலில் சி.கீரனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு வசந்தன் இடமாறுதலில் சென்றுள்ளார். தலைமை யாசிரியர் தரணியும் வேறு பள்ளிக்கு இடமாறுதலில் சென்றுள்ளார்.

“கீழப்பாலையூர் பள்ளி தன்னிறைவு பெற்று விட்டது. இதுபோல மேலும் பல பள்ளிகளை உருவாக்க வேண்டும். அதுவே எனது கனவு. அதனாலேயே இடமாறுதலில் சென்றுள்ளேன்” என் கிறார் வசந்தன்.

ஆசிரியர்கள் நினைத்தால் அரசுப் பள்ளிகளை எந்த உச்சத்துக்கும் உயர்த்த முடியும். அதற்கு கீழப்பாலையூர் ஒரு சிறந்த முன்னுதாரணம்.

## 2.3 செயல்பாடு

பங்கேற்பாளர்களை சில குழுக்களாக பிரித்து கீழ்க்காணும் தலைப்புகளில் விவாதித்து அறிக்கை தயார் செய்து வழங்கச் செய்தல்.

1) சிறந்த வகுப்பறைச் சூழலை மேம்படுத்துவதில் தடையாக இருப்பது எவை?
2) தாங்கள் வகுப்பறைச் சூழலை மேம்படுத்த மேற்கொண்டவைகளை பட்டியலிடுக.

## 2.4 வகுப்பறையில் கட்டமைப்பு சார்ந்த சூழ்நிலையை மேம்படுத்த SWOT ஆய்வு

| வ எண். | பலம் [Strength] | வ. எண். | பலவீனம் [Weakness] |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| வ எண். | வாய்ப்பு [Opportunity] | வ. எண். | அச்சுறுத்தல் [Threats] |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |

## 2.5 வகுப்பறைச் சூழல் மேம்பட

- வகுப்பறை சுத்தமாக, காற்றோட்டமாக மற்றும் மாணவர்கள் சுதந்திரமாக நடப்பதற்கு ஏதுவாக இருத்தல்.
- மாணவர்களின் ஆசிரியர் தொடர்பு, பாதுகாப்பு மற்றும் மதிப்பை சமமாக அங்கீகரித்தல்.
- மாணவர்களின் இருக்கை மற்றும் மேசைகளை ஆசிரியர் அனைவரையும் உற்று நோக்க வசதியாக அமைத்தல்.
- வண்ணமயமான விளக்கப்படங்கள், படங்கள், சுவர் அகராதி போன்றவற்றை சுவர்களில் ஒட்டி மாணவர்களுக்கு காட்சிப்படுத்துதல்.
- பெற்றோர்கள் மற்றும் ஊர் பெரியவர்களை வகுப்பறைக்கு அழைத்து வகுப்பறையை காணச் செய்து அவர்களுடனான தொடர்பை மேம்படுத்துதல்.
- மாணவர்களின் படைப்பை (கதை, கவிதை, கட்டுரை படத்தை ) சுவற்றில் ஒட்டுதல், வகுப்பைறைச் செயல்பாட்டின் போது அவற்றை அங்கீகரித்தல்.
- மாணவர்களுக்கான வாசிப்பு மூலையை உருவாக்கி அவர்களுடன் அமர்ந்து புத்தகங்களை வாசிப்பது.
- மாணவர்கள் பொறுமையுடன் செயல்பட நீங்கள் முன்னுதாரணமாக செயல்படுங்கள்.
- மதிய இடைவேளையின் போது மென்மையான இசையை கேட்க கணிணியைப் பயன்படுத்துங்கள்.
- ஒரே விதமான கற்றல் கற்பித்தல் பொருட்களைப் பயன்படுத்துதல் மாணவர்களிடையே ஒருவிதமான அலுப்பை ஏற்படுத்தலாம். எதிர்பார்க்காதவை மற்றும் ஆச்சரியமானவையே மாணவர்களை கற்றல் கற்பித்தலில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட துணைபுரியும்.

- ❖ பாடப்புத்தகத்தை மட்டுமில்லாமல் செய்தித் தாள்கள், பத்திரிக்கைகள் போன்றவைகளையும் இணைத்து மாணவர்களுக்கு பயன்படுத்துவது அவர்களுக்கு புது உத்வேகத்தை ஏற்படுத்துவதாக அமையும்.
- ❖ வெறுமனே ஆசிரியரே முழு பாடத்தையும் நடத்தாமல் மாணவர்களின் தேடுதல் மூலமாகவோ, குழு விவாதம் மூலமாகவோ அல்லது கருத்தரங்கு மூலமாகவோ மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தலாம்.
- ❖ பாடங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு சுவாரஸ்யமாக இருக்கிறதா என்பதனை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
- ❖ ஆசிரியரின் மதிப்பீடு முறை எந்த விதத்திலும் மாணவனை பயமுறுத்துவதாக அமைதல் கூடாது.
- ❖ வகுப்பறை சூழலை சங்கடமாக உணரும் எந்த மாணவனும் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்பதனை உணர்தல் வேண்டும்.
- ❖ பெரிய பரிசுப் பொருட்களால் மட்டும் தான் மாணவர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்றில்லை. மாணவனின் தோளை தட்டுதல், அவனது படைப்புகளில் நட்சத்திர குறியீடு இடுதல் ஒரு சின்ன அட்டையை சிறப்பு அட்டையாக அவனுக்கு வழங்குதல் கூட அவனை ஊக்கப்படுத்த முடியும் என்பதனை ஆசிரியர் நினைவில் கொள்ள வேண்டும்.
- ❖ எப்பொழுதும் மாணவனை காணும் போதெல்லாம் புன்னகையுங்கள் இது மாணவர்களிடத்தில் நேர்மறை எண்ணத்தை வளப்படுத்தும்.
- ❖ ஒவ்வொரு நாளும் ஒரு புதுமையான செயல்பாட்டை செயல்படுத்துங்கள் இதனால் உங்களின் ஆளுமைத்திறன் மேம்படும்.
- ❖ அனைத்து மாணவர்களையும் கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- ❖ கற்றல் செயல்பாடுகளில் கணிணியைப் பயன்படுத்துதல்.
- ❖ கணிணியைப் பயன்படுத்தி மாணவர்களை பவர் பாயிண்ட் தயாரிக்கச் செய்தல்.

- ❖ ஊர் பெரியவர்களின் உதவியை நாடி வகுப்பறைச் சுவர்களில் வண்ணமயமான படங்களை வரையச் செய்தல்.
- ❖ வகுப்பறையும் எனது வீடே என்ற மனோபாவத்தை மாணவர்களிடத்தில் வளர்த்தல்.
- ❖ வகுப்பறை செயல்பாடுகளை செயல்படுத்த மாணவர்களை குழுக்களாக செயல்பட ஊக்குவித்தல்.

## 2.6 ஜீன் பியாஜேயின் (Jean Piaget) வகுப்பறைக்கான கோட்பாட்டை செயல்படுத்துதல்

1. தேவைப்படும் பொழுதெல்லாம் திண்திரை (Concrete) பொருட்களையும் கானொளிக் காட்சிகளையும் பயன்படுத்துங்கள்.
2. கூற வரும் கருத்துக்களை அளவாகவும், அதனை செயல்களின் மூலமோ அல்லது வார்த்தைகளின் மூலமோ வழங்குதல்.
3. மாணவன் உலகத்தை பிறர் கூறிய கருத்துக்களை சார்ந்து நோக்காமல் தன்னுடைய எண்ண ஓட்டத்தின் மூலம் காண வழிவகை செய்தல்.
4. ஒரு வார்த்தைக்கு பல பொருள்கள் இருக்கும் என்பதனையும் மாணவனுக்கான புரிதலையும் அவன் கண்டுபிடித்த பொருளையும் அங்கீகரித்தல்.
5. தானே செய்து கற்றல் போன்றவற்றிற்கு அவனை அனுமதித்தல்.
6. மாணவர்களுடைய கற்றலுக்கு பல வகையான அனுபவங்களைப் பகிர்தல்.

## 3. வகுப்பறையில் மனம் (Mental) சார்ந்த சூழ்நிலையை மேம்படுத்துதல்

வகுப்பறை என்பது நான்கு சுவர்களால் சூழ்ந்த, இருக்கைகள் வரிசையாக அமைந்த, கவனிக்கும் மாணவர்களால் நிரம்பிய, கற்பிக்கும் ஆசிரியரால் அமைந்த அறை என்பது மரபான ஒன்று. தற்போது அப்படி இல்லை என்பது தான் நிஜம். உண்மையில் தற்போதைய வகுப்பறை என்பது கற்பித்தல் - கற்றலுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அதரப்பழசான கல்விக் கற்பித்தல் செயல்பாடுகள் மறற்து விட்டு, ப்ரொக்ஜடரில், கணிணியில் பாடம் கற்பிக்கும் ஸ்மார்ட் க்ளாஸ் திட்டம் இன்று பல பள்ளிகளில் நடைமுறையில் உள்ளது. வகுப்பறை என்பது தேடலுக்கான வழி என்பதை அனைவரும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் என்பவர் வெறும் புத்தகத்தை வாசித்துவிட்டு, கரும்பலகையில் எழுதிக் கற்பிப்பவராக இன்றைய நடைமுறையில் தொடர்வது என்பது சாத்தியமன்று. தோல்பாவையை, பொம்மலாட்டத்தை வைத்து பாடம் நடத்தும் ஆசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள். மாணவர்களை உற்சாகப்படுத்தி ஒரு ஆசிரியர் கற்பிக்கும் பாடமே அவர்கள் வாழ்வில் என்றும் நிலைத்திருக்கும். வெறுமனே புத்தகத்தை வாசித்து பொருள் கூறுவதினால் மாணவர்களின் மனதில் எதுவுமே பதிய வாய்ப்பில்லை.

ஒரு ஆசிரியர் தனது வகுப்பறைப் பணிகளை சிறப்பான முறையில் நிறைவேற்றுவதற்கு உளவியல் அறிவானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகவும் அத்தோடு அதிகம் பங்களிப்புச் செய்யும் ஒன்றாகவும் திகழ்கின்றது. ஒரு ஆசிரியரின் வகுப்பறைப் பணிகளாக, கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளல், மாணவர்களின் நடத்தையை அவதானித்தல், மாணவர்களின் பிரச்சினைகளை இனங்காணல், அவற்றைத் தீர்த்து வைத்தல், புதிய முறையிலான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், வகுப்பறையில் மகிழ்ச்சியை ஏற்படுத்துதல் ஆகும். மாணவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிவதுடன் மீத்திறன் மிக்க பிள்ளை, குறைபாடுடைய பிள்ளை, கட்புல செவிப்புல பாதிப்புடைய பிள்ளை, மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளை என இனங்காணவும் அதற்கேற்ப தனது கற்பிக்கும் சூழலை அமைப்பவரே ஒரு

சிறந்த ஆசிரியர். மாணவர்களின் இயல்பிற்கேற்ப தனது செயல்பாடுகளை வரிசைப்படுத்தி திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி கற்பிக்கும் ஆசிரியரே மாணவர் மனதில் நீங்கா இடம் பிடிப்பார். கற்றது கடுகளவு என்பதை உணர்ந்து ஆசிரியர் என்பவர் எப்பொழுதும் கற்றுக் கொள்பலராக இருக்க வேண்டும்.

## 3.1 சூழ்நிலை - 1

ஒரு குழந்தை மழலைக் குரலால் 'அம்மா' என அழைக்கும் முதல் வார்த்தைதான் தாய்க்கு கிடைக்கும் மிகப் பெரிய மகிழ்ச்சிகளில் ஒன்றாக இருக்க முடியும். ஆனால், அந்தக் குழந்தை இரண்டு வயது வரை சரியாக பேச முடியாத குறைபாடு இருந்தது. துறுதுறுவென குறும்பு செய்து திரியும் ஒரு குழந்தை, தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் குதூகலத்தோடு வைத்திருக்கும், ஆனால், இந்தச் சுட்டியோ ஆழ்ந்த தியானத்தில் இருந்தது. ஒரு துறவியைப் போல அமைதி. சரியான கவனிப்புத் திறனும் இல்லை.

அந்தக் குழந்தைக்கு இரண்டரை வயதானபோது, புதிதாகப் பிறந்த தங்கையைப் பார்த்து, “இந்தப் பொம்மைக்கு சக்கரமே இல்லியே எப்படி இது போகும்?" எனக் கேட்டது. ஆறு வயதில் பள்ளியில் சேர்த்தபோது, ஆசிரியர்களும் 'இவன் ஒரு மக்கு குழந்தை' எனச் சொன்னார்கள்.

இப்படி, பெற்றோரையும், ஆசிரியர்களையும் கவலைப்பட வைத்த ஒரு குழந்தை, இயற்பியல் துறையில் மிகப் புரட்சிகரமான கோட்பாடுகளை வெளியிட்டு, இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிவியல் அறிஞராகப் பெயரெடுத்தது அந்தக் குழந்தைதான் ஐன்ஸ்டீன்.



அவருக்கு கவனிப்புத் திறன் குறைவாக இருந்ததும் படிப்படியாக சரியாகி வந்ததும் உண்மை. ஆனால், ஆசிரியர்கள் 'மக்கு' என்றது உண்மை இல்லை. காரணம், அன்றைய கல்விமுறையின் மீது ஐன்ஸ்டீனுக்கு வெறுப்பு இருந்தது, அதுவும் ஆறு அல்லது ஏழு வயதிலேயே.

அந்தக் காலத்தில் பள்ளிகள் அனைத்துமே மதம் சார்ந்தவையாக இருந்தன. ஐன்ஸ்டீனின் குடும்பம், யூத மதத்தைச் சேர்ந்தது. தந்தை ஹெர்மான், ஒரு கத்தோலிக்க பள்ளியில் மகனைச் சேர்த்தார். சில காலம் கழித்து இன்னொரு யூத மத பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளிகள் மட்டும் மத நிறுவனங்களோடு அல்லாமல் பாடத்திட்டங்களும் மதம் சார்ந்தவையாக இருந்தன. எளிமையான அறிவியல் விஷயங்களும் மதம் சார்ந்த பார்வையுடனே போதிக்கப்பட்டன. ஐன்ஸ்டீனுக்கு சிறு வயதில் கடவுள் மீதான பக்தி இருந்தாலும், அறிவியலை மதம் சார்ந்து போதிக்கப்படுவதில் விருப்பம் இல்லை.

புத்தகத்தில் என்ன இருக்கிறதோ, அதை மனப்பாடம் செய்து அப்படியே ஒப்புவிக்க வேண்டும் என ஆசிரியர்கள் எதிர்பார்த்தார்கள். ஐன்ஸ்டீனோ தான் எவ்வாறு விளங்கிக்கொண்டாரோ அப்படியே பதில் சொல்லவும், எழுதவும் செய்தார். எக்கச்சக்க சந்தேகங்களை ஆசிரியர்களை நோக்கி வீசினார். சில

ஆசிரியர்கள் தங்களுக்கு தெரிந்ததைச் சொன்னார்கள். சிலரோ, ஒரு பொடியன் இப்படி கேள்வி கேட்பதா எனப் பொருமினார்கள். இந்தச் சுதந்திரச் சிந்தனையும், கேள்வி கேட்கும் தேடலுமே, அன்றைய ஆசிரியர்களிடம் 'மக்கு' முத்திரையைப் பெற்றுத் தந்தது. பள்ளிப் படிப்பை முடிக்க ஓராண்டு இருந்த நிலையில், பள்ளியைவிட்டு வெளியேற்றினார்கள். பிறகு, எதிர்பார்த்த மாதிரியான கல்வியை வழங்கிய ஸ்விட்சர்லாந்து நாட்டுக் கல்வி நிலையம் ஒன்றில் படிப்பைத் தொடர்ந்தார் ஐன்ஸ்டீன்.

ஐன்ஸ்டீனின் இந்தச் சுதந்திர சிந்தனை, ஆராய்ந்து கேள்வி கேட்கும் குணம் அவருடைய ஐந்து வயதிலேயே தொடங்கிவிட்டது. ஐந்து வயதில் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்த ஐன்ஸ்டீனுக்கு அவரது தந்தை, ஒரு காந்தத் திசைக்காட்டியை (Magenetic Compass) வழங்கினார். ஐன்ஸ்டீன் முதன்முதலில் தொட்டுப் பார்த்த அறிவியல் சார்ந்த பொருள் அது. அந்தத் திசைக்காட்டியை எந்தப் பக்கம் திருப்பினாலும், அந்த முள் அதற்கேற்றவாறு திரும்பி எப்படி ஒரே திசையைக் காட்டுகிறது என்று யோசிக்கத் தொடங்கினார். கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி தன் மாயக்கரங்களைக் கொண்டு இந்த முள்ளை இயக்குவதாக நினைத்தார். அந்தக் கண்ணுக்குத் தெரியாத சக்தியின் பெயர் காந்தவிசை என்று புரியாத வயது. அதைப் பற்றி யோசிக்கத் தொடங்கியதில் இருந்தே அவருடைய ஆராய்ச்சி மனப்பான்மை விழித்துக்கொண்டது.

மிகப்பெரிய ஆளுமைகளின் இளம்பிராயத்து அறிவை விசாலமாக்கியவை புத்தகங்களாக இருக்கும். அதுவும் அறிவியல் சார்ந்த புத்தகங்களைவிடவும் கதைப் புத்தகங்களே அதிக பங்கு வகித்திருக்கும். ஐன்ஸ்டீன் வாழ்விலும் அப்படியே நடந்தது. அவரது வீட்டில் ஒரு நூலகம் இருந்தது. அவருடைய பன்னிரண்டாம் வயதில் வரைகணிதம் (Geometry)

தொடர்பான ஒரு புத்தகம் கிடைத்தது. அந்தப் புத்தகம் கணிதம் மீதான ஒரு காதலை ஏற்படுத்தியது. ஆற்றலும் பொருளும் (Energy and Matter) என்ற புத்தகத்தை வீட்டு நூலகத்தில் படித்தார். மதக் கருத்துகள் இல்லாத வகையில் எளிமையாக அறிவியலை இந்தப் புத்தகம் போதித்தது. பள்ளியில் கணிதத்திலும் இயற்பியலிலும் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்றார்.

பள்ளியில் போதிக்கப்பட்ட கணிதம் அவருக்கு வெறுப்பானதாக இருந்தாலும், வீட்டில் அவருடைய சித்தப்பா ஜேக்கப், கணிதத்தை அருமையாகப் போதித்தார். அல்ஜிப்ராவைப் பற்றி அவர் கதையாகவே நடத்தினார். அதாவது “அல்ஜிப்ரா என்பது ஒரு விளையாட்டு. பெயர் தெரியாத ஒரு சிறு விலங்கைத் தேடிக் காட்டுக்குப் போகிறோம். முதலில் அந்த விலங்குக்கு X எனப் பெயர் வைக்கிறோம். தேடிக் கண்டுபிடித்த பிறகு அதற்குப் பெயர் சூட்டுகிறோம்” என்றார். ஐன்ஸ்டீனை மிகவும் அவருக்குப் பிடிக்கும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னொரு அருமையான துணையும் ஐன்ஸ்டீனுக்குக் கிடைத்தது. யூத மத வழக்கப்படி ஐன்ஸ்டீன் குடும்பம், வாரம்தோறும் ஓர் ஏழை மாணவருடன் உணவைப் பகிர்ந்துகொண்டார்கள். அந்த ஏழை மருத்துவ மாணவரின் பெயர் Max Talmud. ஐன்ஸ்டீனின் அறிவை விரிவாக்கியதில் இவருடைய பங்கும் முக்கியமானது. வாரந்தோறும் அவர் வரும்போதெல்லாம் ஐன்ஸ்டீனுக்கு ஒரு புத்தகத்தைக் கொண்டுவருவார். கணிதம், இயற்பியல், தத்துவம் போன்ற துறைகளில் ஐன்ஸ்டீனுக்கு பெரும் ஆர்வத்தை வரவழைத்தவர். இவர் அறிமுகப்படுத்திய புத்தகங்களில், அறிவியல் புனைகதைகள் பல தீவிரமாக யோசிக்கவைத்தன.

இப்படி விசாலமான அறிவினால், பள்ளியில் ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்க, ஆசிரியர்களோ ஐன்ஸ்டீனை வெறுத்தார்கள். இவன் தொடர்ந்து பள்ளியில் படித்தால், பிற மானவர்களையும் கெடுத்துவிடுவான்

என்று அஞ்சினார்கள். இவனைப் பள்ளியில் இருந்து எப்படி விலக்குவது என யோசித்தார்கள். மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் கல்விமுறையை வெறுத்த ஐன்ஸ்டீனும் பள்ளியைவிட்டு வெளியேறிவிட யோசித்துக்கொண்டிருந்தார். பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு ஓராண்டு இருந்த நிலையில் உடல்நிலை சரியில்லாததைக் காரணம் காட்டி வெளியேறினார்.

இவருடைய சிந்தனை முறைக்கு ஒத்துவரும் சுவிட்சர்லாந்து நாட்டின் ஸ்விஸ் பெடரல் பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிக்கச் சென்றார். அங்கு நடந்த நுழைவுத் தேர்வில் கணிதத்தையும் இயற்பியலையும் தவிர வேறு பாடங்களில் தேர்ச்சி பெறவில்லை. ஆனால், கணிதத்தில் இவருக்கு இருந்த திறமையைக் கண்டு, அவர் முடிக்காமல் விட்ட பள்ளிப் படிப்பை ஸ்விட்சர்லாந்தின் ஒரு பள்ளியில் முடித்துவிட்டு வந்தால், இங்கே படிக்க அனுமதி தருவதாக, அந்தக் கல்லூரியின் முதல்வர் உறுதியளித்தார். அதேபோல பள்ளிப் படிப்பை முடித்து அந்தக் கல்லூரியிலும் சேர்ந்து படித்தார் ஐன்ஸ்டீன். அதன்பிறகு நடந்தவை எல்லாம் வரலாறு.

பதினாறு வயதிலேயே, தான் விரும்பிய வகையில் கல்வி கற்பதற்காக தன் நாட்டைவிட்டு இன்னொரு நாட்டுக்குச் சென்று படிக்கும் அளவுக்கு மனவுறுதி உடையவராகவும், அறிவியல் மீதான தீராக்காதலுடனும் இருந்தார். கல்வியில் மட்டுமல்ல, சிறு வயதிலேயே வயலின் வாசிப்பதிலும் திறமையானவராக விளங்கினார்.

## 3.2 சூழ்நிலை - 2

சிறந்த சமுதாயத்தை ஆசிரியர் தொழிலே உருவாக்கும்' என்ற எண்ணத்தால் ஆசிரியரானேன் என்கிறார் காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தனஞ்சேரி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை சுகிகலா. தன்னுடைய 29 வருட கால ஆசிரியப்பணி அனுபவத்தை இந்த அத்தியாய அன்பாசிரியரில் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

"வேலை கிடைத்து முதல்நாள் திண்டிவனத்தில் ஓர் அரசுப்பள்ளிக்குச் சென்றபோது கிழிந்த சட்டை, ஒழுகிய மூக்கு என மாணவர்கள் பரிதாபமான நிலையில் இருந்தனர். அவர்களைப் பார்த்தாலே அழுகை வந்தது. இப்படியும் ஒரு பள்ளி இருக்குமா என்று அதிர்ச்சியடைந்தேன். நான் வேலை பார்த்த இடங்கள் அனைத்தும் கிராமங்கள் என்பதால் அங்கே கல்வி குறித்த விழிப்புணர்வு பெரிதாக இல்லை. முதலில் கல்விமுறையிலும், அடுத்ததாக கட்டமைப்பிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

மாணவர்களின் வாசிப்பை மேம்படுத்தும் விதமாக, நூலகத்தில் புத்தகம் படிக்கும் ஒவ்வொருவரும் அதைப்பற்றிய கருத்தை ஒரு நோட்டில் எழுதி வைப்பர். அதற்காகவே தனியாக ஒரு பிரிவை நிர்வகித்து வருகிறோம். அதிக புத்தகங்களைப் படித்து, அவை குறித்து கருத்து சொன்ன மாணவருக்கு பள்ளி விழாக்களில் பரிசளிக்கிறோம். எங்கள் பள்ளியில் நேரந்தவறாமை முழுமையாகக் கடைபிடிக்கப்படுகிறது. காலந்தாழ்ந்த வருகைப் பதிவேடு கிடையாது. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் சரியான நேரத்துக்கு வந்துவிடுகிறார்கள்.

மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை இலக்கிய மன்றம் நடைபெறும். 1- 5 வகுப்புக் குழந்தைகளுக்கு பால சபை நடக்கும். 6 - 8 வகுப்பு மாணவர்கள்

சமூக சிந்தனைகள், தலைவர்களின் கருத்துகளை அவர்களைப் போலவே வேடமிட்டுப் பேசுவார்கள். அன்றைக்கே அடுத்த மாதத்துக்கான தலைப்பு வழங்கப்பட்டுவிடும்.

இரண்டாவது வெள்ளியன்று ஆங்கில இலக்கிய மன்றம். வினைச்சொல், பெயர்ச்சொல், உரிச்சொற்கள், ஆங்கில இலக்கணம் குறித்து குழந்தைகளும், நாடகம், நடிப்பு, மிமிக்ரி ஆகியவற்றைப் பெரிய வகுப்பு குழந்தைகளும் அரங்கேற்றுவார்கள். மூன்றாவது வெள்ளியை கணிதமன்றத்துக்கு ஒதுக்கியிருக்கிறோம். சிறிய வகுப்பினர் வடிவங்கள் உள்ளிட்டவற்றைச் செய்ய, பெரியவர்கள் கணித வல்லுநர்கள் பற்றிய தகவல் திரட்டல், சுடோகு விளையாட்டில் கவனம் செலுத்துவார்கள். இந்த மன்றங்கள் அனைத்தும் மாணவர்களின் படைப்பாற்றல் பெருகவும், பன்முகத் திறன் வளரவும் உதவுகிறது.

கிராம சூழ்நிலையில் இருந்து படிக்கவரும் பெரும்பாலான மாணவர்கள், இயல்பான மனநிலையோடு பள்ளிக்கு வருவதில்லை. வீட்டில் அடிவாங்கிக்கொண்டு வரும் மாணவர்களைக்கூட பார்த்திருக்கிறேன். அதனாலேயே அவர்களை மகிழ்விக்க நீர்வீழ்ச்சி ஒன்றை ஆத்தனஞ்சேரி பள்ளியில் உருவாக்கினோம். பள்ளி தொடங்கும்போது, இடைவேளை, உணவுவேளைகளில் அவை இயங்கும். மாணவர்களின் உடல் நலனைப் பேண சீசா, ஊஞ்சல் ஆகியவற்றை அமைத்தோம். யானை, திருவள்ளுவர் ஆகிய சிலைகள் அவர்களின் அழகுணர்வை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டன.

மூலிகைத் தோட்டங்கள், பூச்செடிகள் பள்ளியில் பசுமையை ஏற்படுத்தின. லவ் பேர்ட்ஸ் வளர்க்கிறோம். சுற்றுச்சுவர்களில் தலைவர்களின் கருத்துக்களை எழுதி வைத்திருக்கிறோம். இதன்மூலம் ஒரு குழந்தையாவது மாறினால் அதுவே எங்களின் வெற்றி. இவற்றைப் பராமரிக்க ஆசிரியர்களின்

செலவில் ஓர் ஆயம்மாவை நியமித்திருக்கிறோம். 9 வகுப்பறைகளில் 7-க்கு டைல்ஸ் ஒட்டியிருக்கிறோம். 6 கணிப்பொறிகளும், 5 மடிக்கணினிகளும் இருக்கின்றன. இணைய வசதியும் எங்கள் பள்ளியில் உண்டு. ஸ்மார்ட் வகுப்பறையை உருவாக்கும் எண்ணத்தில் இருக்கிறோம். 24 மணி நேர தண்ணீர் வசதி, கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது.

எப்படி இத்தனை உதவிகள் சாத்தியமானது?

எல்லாவற்றுக்கும் நாம் அணுகும் விதம்தான் காரணம். பொதுமக்களிடம் பண்பாக பணிவாக பேசினால் கண்டிப்பாக உதவுவார்கள். முக்கியமாக அவர்களிடம் நாங்கள் ஒரு பைசாவைக்கூட பணமாக வாங்குவதில்லை. பொருட்களாக வாங்கிக் கொடுக்கச்சொல்லி விடுகிறோம். இதனால் அவர்களுக்கு எங்களின் மீதான நம்பிக்கை அதிகமாகிறது.

எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதைத்தான் என்னுடைய பலமாக நினைக்கிறேன். என்னிடம் படித்த ஒரு குழந்தைகூட சோடை போனதில்லை என்பதை எண்ணி பெருமை கொள்கிறேன். குழந்தைகளின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது என் ஆசை. மற்றவர்கள், 'எப்படி உங்கள் பள்ளிக்கு மட்டும் இத்தனை நிதியுதவி கிடைக்கிறது?' என்று கேட்பதுண்டு. நன்கொடையாளர்களிடம் நமது தேவையைப் புரியவைத்தால் கண்டிக்காமல், கடிந்து பேசாமல் அவர்கள் உதவி செய்வார்கள்;செய்கிறார்கள். இதையும் என்னுடைய பலமாகப் பார்க்கிறேன் என்று சிரிக்கும் அன்பாசிரியர் சுகிகலாவின் வார்த்தைகளில் கொப்பளிக்கிறது நம்பிக்கையும் ஈரமும்.

## 3.3 செயல்பாடு

பங்கேற்பாளர்களை சில குழுக்களாக பிரித்து கீழ்க்காணும் தலைப்புகளில் விவாதித்து, அறிக்கையை சமர்பிக்க செய்யவும்

- ❖ ஜன்ஸ்டீனைப் போன்ற குழந்தை உங்கள் வகுப்பிலிருந்தால், நீங்கள் எவ்வாறு அக்குழந்தையை அணுகுவீர்கள்?
- ❖ உங்கள் வகுப்பறையில் மனம் சார்ந்த சூழ்நிலையை மாணவர்களுக்கு எவ்வாறு ஏற்படுத்தினீர்கள் என்பதனை பட்டியலிடவும்

## 3.4 வகுப்பறையில் மனம் சார்ந்த சூழ்நிலையை மேம்படுத்துதல் SWOT ஆய்வு

| வ எண். | பலம் [Strength] | வ. எண். | பலவீனம் [Weakness] |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| **வ எண்.** | **வாய்ப்பு** [Opportunity] | **வ. எண்.** | **அச்சுறுத்தல்** [Threats] |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |

### 3.5 வகுப்பறையில் மனம் சார்ந்த சூழ்நிலையை மேம்படுத்த

- ❖ எளிய தகவல்களைச் சொல்லி அதில் மாணவர்களின் எண்ணங்களை தூண்டி கல்வி அறிவை சிறிது சிறிதாக அதிகரிப்பது.
- ❖ ப்ரூனரின் கோட்பாடுகளின் படி கற்றல் என்பது ஒரு சுறுசுறுப்பான நிகழ்வு மாணவர்கள் தான் ஏற்கனவே கற்றுக் கொண்டவைகளில் இருந்து புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்கின்றனர். அதன்படி கொடுக்கப்பட்ட தகவலை அலசி, ஆராய்ந்து, கோட்பாடுகளை உருவாக்கி அறிவுசார் முடிவுகளை மாணவர்கள் எடுக்க துணை புரிவது.
- ❖ ஆக்கபூர்வ உரையாடல்களில் மாணவர்களை அதிகம் ஈடுபட செய்தல் வேண்டும்.
- ❖ ஆசிரியரின் பணி என்பது பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வது தான்.
- ❖ பாடத்திட்டம் என்பது ஒரு சுருள் போன்றது. இதன்மூலம் மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே கற்றுக் கொண்டவைகளிலிருந்து புதியவற்றை அறிவார்கள்.
- ❖ மாணவர்கள் தாங்களாகவே தகவல் சேகரிக்கும் வண்ணம் சில பகுதிகள் அமைய வேண்டும்.
- ❖ நேரடி அனுபவத்தின் வாயிலாக அறிவு பறிமாற்றம் நிகழ்த்துவது ஒரு ஆசிரியரின் சிறப்பு.
- ❖ ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாகவே கற்றுக் கொள்ளும் திறன் உள்ளது. எனவே ஒரு ஆசிரியரின் பங்கு அவற்றை நெறிபடுத்துவதே ஆகும்.
- ❖ கல்வி கற்க ஏற்ற சூழலை உருவாக்குதல்

❖ கற்றலின் நோக்கத்தை மாணவர்களுக்கு புரியவைத்தல்.
❖ அறிவுசார் மற்றும் உணர்வு சார் கல்விக்கூறுகளை சமமாக வழங்குதல்.
❖ மாணவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தாமல் அவர்களிடம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.
❖ செயல்முறைக் கற்றல் முறை மாணவனின் தேவைகளையும், ஆர்வத்தையும் இனங்கண்டு அவனை அதிக ஈடுபாட்டுடன் கற்கச் செய்கிறது.
❖ குறிக்கோள் நிர்ணயித்தல் முதல் சோதனைகள் மூலம் இலக்கினை அடைந்து விட்டோமோ என்பதை அறியும் வரை அனைத்து பாகங்களும் செம்மையாக செய்யப்பட வேண்டும்.
❖ நகைச்சுவை கலந்த வேடிக்கையான கல்விச் சூழல் கற்றலை அதிகம் மேம்படுத்துகிறது.
❖ ஆசிரியர்கள் சுழற்சி முறையில் சில முக்கியமான கேள்விகளைக் கேட்டு அவர்களின் உரையாடல்களை கவனித்து அவர்கள் எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்பதை அறியலாம்.
❖ மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட விசயங்களை புதிய சூழலில் பயன்படுத்த வழிவகை செய்தல்.
❖ உருவகப்படுத்தி நடித்தல் மூலம் மாணவர்களுக்கு அதிகம் பலன் கிட்டும்.
❖ களப் பயணத்திற்கு அழைத்துச் சென்று மாணவர்களுக்கு நேரடி அனுபவம் கிடைக்கச் செய்தல்.
❖ பள்ளித் தோட்டத்தில் மூலிகைச் செடிகள் வளர்க்கச் செய்து அதன் பலன்களை அரியச் செய்தல்.
❖ அறிவியல் கண்டுபிடிப்புகள் சார்ந்த காணொலியை காணச் செய்தல்.
❖ பள்ளி ஆண்டுவிழா மற்றும் விளையாட்டு விழா போன்றவற்றிற்கான வரவு - செலவு விபரங்களை மாணவர்கள் மூலம் செயல்படுத்தலாம்.

## 4. வகுப்பறையில் உணர்ச்சி [Emotional] சார்ந்த சூழ்நிலைகளை மேம்படுத்துதல்.

இன்றைய காலக்கட்டத்தில் மாணவர்கள் ஒரு சிறுகண்டிப்பு வார்த்தையைக் கூட தாங்கிக் கொள்ளுவதில்லை. எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறார்கள். இதன் காரணமாக, தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு சென்று விடுகிறார்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம்.வி.முரளிதரன் அவர்கள் ஒரு தீர்ப்பின் போது புத்தாக்கப் பயிற்சிகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமென்றும் மாணவர்களை திட்டாமல், அச்சுறுத்தாமல், அடிக்காமல் கற்பிக்கும் முறையை ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். பள்ளிக்கூடங்களின் இன்றைய மாணவர்களை கையாளுவது என்பது ஒரு தனி கலையாகும். அவர்களை அன்பால் மட்டுமே திருத்த முடியுமே தவிர, அதட்டியோ உருட்டியோ கற்றல் செயலில் ஈடுபடுத்த முடியாது. ஆசிரியப்பணி என்பது மிகச் சவாலாகக் கருதப்படும் காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆசிரியரின் ஒவ்வொரு கண்டிப்பும் தன்னுடைய வளர்ச்சிக்காக என்பதை மாணவர் புரிந்து கொள்ளும் பக்குவத்தை வளர்ப்பது நம் அனைவரின் கடமையாகும். பாடப் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட பாடத் திறன்களை மாணவர் பெறும் வண்ணம் கற்றுக் கொடுக்க வேண்டும். நோயுற்ற மாணவரிடம் உடல் நலம் விசாரிப்பது, மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவது, மாணவர்களிடம் அலைபேசி எண்ணைக் கொடுத்து எந்நேரமும் தன்னை தொடர்பு கொள்ளக்கூடிய நிலையினை ஏற்படுத்தும் போது நல்லிணக்கம் உருவாக வாய்ப்பிருக்கிறது.

### 4.1 சூழ்நிலை - 1

இரவை ஒளியால் நிரப்பிய அற்புத மனிதர் தாமஸ் ஆல்வா எடிசன். அறிவியல் மீதான அதீத ஆர்வமும் விடா முயற்சியுமே உலகமே கொண்டாடும் மனிதராக அவரை மாற்றியது. அவரின் வாழ்க்கையை பலரும் முன்மாதிரி

யாக கொண்டு வாழ்ந்துவருகின்றனர். அப்படியான அவரின் வாழ்வில் நிகழ்ந்த ஆச்சர்யமான சம்பவம் ஒன்று தெரியுமா?



எடிசன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாளில், அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்திருந்தார் ஆசிரியர். அந்தக் கடிதத்தை அம்மா மட்டுமே படிக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார் அவரின் ஆசிரியர். அதன்படி அம்மாவிடம் கொடுத்தார். அந்தக் கடிதத்தைப் படித்த எடிசனின் அம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என எடிசன் கேட்டபோது, "உங்கள் மகன் மிகவும் புத்திசாலி. அவரின் அறிவுக்கு ஏற்றளவில் இந்தப் பள்ளி இல்லை. அதனால் எடிசனை வீட்டிலிருந்தே படிக்க வையுங்கள்" என்று அம்மா உரக்க படித்ததைக் கேட்டு எடிசன் உற்சாகமாக சத்தமிட்டார்.

ஆண்டுகள் படு வேகமாக கடந்தன. தாமஸ் ஆல்வா எடிசன் புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் உலகமே போற்றும் மகத்தான விஞ்ஞானியாக திகழ்ந்து வந்தார். பாராட்டுகள் குவிந்த வண்ணம் இருந்தன. ஒருநாள்

எடிசனின் அம்மாவும் இறந்துபோனார். அதன்பின் சில நாட்கள் கழித்து எடிசன் வேறு ஏதோ தேடுகையில், சின்ன வயதில் ஆசிரியர் கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது. தன்னைப் பற்றி உயர்வாக எழுதிய கடிதத்தை மீண்டும் படிக்க ஆசைப்பட்டு படித்தார். ஆனால் கடிதத்தில் இருந்த வரிகள் அம்மா வாசித்தவை அல்ல.

"உங்களின் மகன் மனநிலை சரியில்லை எனக் கருதுகிறோம். அவனை எங்கள் பள்ளியில் படிக்க தொடர அனுமதிக்க முடியாது"

இந்தக் கடிதத்தைப் படித்ததும் எடிசன் உறைந்துவிட்டார். இந்த விஷயம் தனது சின்ன வயதில் தெரிந்திருந்தால் எந்தளவுக்கு மனதளவில் முடங்கிபோயிருப்போம் என்பதை ஒரு நிமிடம் நினைத்து தன்னை உதறிக்கொண்டார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதே பெரிய விஷயமாக இருந்தது. தன் உழைப்பையும் முயற்சியையும் பாராட்டி ஊக்கமளித்த அம்மாவை மனதார நன்றியோடு நினைத்துக்கொண்டார்.

ஒருவர் தன்னைப் பற்றிய விஷயங்கள் முழுவதையும் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போதே தனது பழக்க வழக்கங்களில் ஓர் ஒழுங்கைக் கொண்டு வரமுடியும் என்பார்கள். ஆனால் ஒருவருக்கு தன்னைப் பற்றிய சில விஷயங்கள் தெரியகூடாதவை என்பதும் இருக்கிறது. அதுவும் அவரின் வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும். இதைத்தான் எடிசனுக்கு அவரது தாய் மறைமுகமாக கற்றுக்கொடுத்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தை எடிசன் படிக்கவே கூடாது என அவரின் தாய் நினைத்திருந்தால் அதை தீயில் எரித்திருப்பார். ஆனால் அதை பின்வரும் காலத்தில் எடிசன் படிப்பது சரிதான் என நினைத்ததாலே அதைப் பத்திரப்

படுத்தி வைத்திருக்கக்கூடும். குழந்தை வளர்ப்பின் ஒவ்வோர் அடியையும் மிகவும் கவனத்துடன் நகர்த்த வேண்டும் என்பதற்கு இது ஆகச் சிறந்த உதாரணம்.

## 4.2 சூழ்நிலை - 2

ஆப்ரஹாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய நெகிழ்ச்சித் தரும் கடிதம்! – அரியதோர் வரலாற்று நிகழ்வு

அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர் களாக இருக்கமாட்டார்கள் என அவனுக்கு சொல்லித்தாருங்கள். ஆனால்,

பகைவர்களுக்கு நடுவில் அன்பான நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்கு தெரிவியுங்கள்.




பொறாமை அவன் மனதை அண்டாமல் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது, கோழைத்தனம் என புரிய வையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்கு திறந்துகாட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குகற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரிதத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் ரசிக்க கற்றுத் தாருங்கள் அவனுக்கு.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்கு கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என விமர்சித்தா லும்கூட, சுயசிந்தனைமீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுக அவனை தயார்படுத்துங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும், உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றைமட்டும் பிரித்தெடு க்க அவனுக்கு கற்றுக்கொடுங்கள்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்கு கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்கு புரிய வையுங்கள்.

போலியான நடிப்பை கண்டால் எள்ளிநகையாடவும், வெற்று புகழுரைகளை கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்கு பயிற்சிகொடுங்கள். அவனை கனிவாக நடத்துங்கள். அதிக செல்லம் கொடுத்து உங்களை சார்ந்திருக்க செய்ய வேண்டாம்.

சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவ னுக்கு ஊட்டுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மவுனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லி கொடுங்கள். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான்... இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம் கற்றுக் கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

இப்படிக்கு,
ஆபிரகாம் லிங்கன்.

### 4.3 செயல்பாடு

**பங்கேற்பாளர்களை குழுக்களாக பிரித்து கீழ்க்காணும் தலைப்புகளில் விவாதத்தில் ஈடுபட்டு அறிக்கை சமர்ப்பிக்க செய்தல்.**

- ❖ **ஆசிரியர் மாணவர் உறவில் ஏற்படும் விரிசலுக்கான காரணிகளாக நீங்கள் கருதுபவை யாவை?**
- ❖ **தாங்கள் பணியாற்றும் பள்ளிகளில் மாணவர்களின் உணர்ச்சி சார்ந்த பிரச்சனையை பட்டியலிட்டு அதற்கான தீர்வை தரவும்.**

## 4.4 வகுப்பறையில் உணர்ச்சி சார்ந்த சூழ்நிலைகளை மேம்படுத்துதல் SWOT ஆய்வு

| வ எண். | பலம் [Strength] | வ. எண். | பலவீனம் [Weakness] |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| வ எண். | வாய்ப்பு [Opportunity] | வ. எண். | அச்சுறுத்தல் [Threats] |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |

## 4.5 வகுப்பறையில் உணர்ச்சி சார்ந்த சூழ்நிலைகளை மேம்படுத்த

- ❖ மாணவர்களின் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள நல்லுறவை மேம்படுத்த, இணைந்து செயல்பட அனுமதித்தால் அவர்களின் உணர்ச்சி சார்ந்த பாதுகாப்பு எண்ணம் மேம்படும்.
- ❖ வகுப்பறை மாணவர்களுக்கான அறை என்ற மனநிலையை அவர்கள் செய்த வேலைபாட்டை சுவரில் ஒட்டி அவர்களுக்கு ஏற்படுத்துல்.
- ❖ மாணவர்களின் பெயர்களை கூறி அழையுங்கள். இதனால் மாணவ ஆசிரியர் உறவு மேம்படும்.

❖ ஆசிரியருக்கு தெரியாதவற்றில் மாணவருக்கு ஐயம் ஏற்பட்டால், கோபம் கொள்ளாமல், தனக்கு தெரியவில்லை என்பதனை கூறி அதனை தயாரித்து வழங்குவதாக மாணவர்களிடத்தில் உறுதியளித்தல்.

❖ பொறுமையையும், அன்பையும், இரக்கத்தையும் மாணவர்களுக்கு கற்றுத்தர ஆசிரியர்களே முன்னுதாரணமாக செயல்பட வேண்டும்.

❖ மாணவர்களிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணுங்கள்.

❖ எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஆசிரியர்களிடமிருந்தே மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

❖ மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆசிரியரே தீர்வு கூறாமல் சுயமாக முடிவெடுக்க ஊக்குவித்தல்.

❖ இன்பத்தை மாணவர்களுடன் பகிரவும்.

❖ மாணவர்களின் விருப்பத்திற்கு செவிமடுப்பது.

❖ அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும் போது, மாணவர்களுடன் இணைந்து அமர்வது.

❖ வீட்டுப்பாடம் கொடுக்கும் பொழுது மாணவர்களின் நிலையை கருத்தில் கொள்ளுதல்.

❖ நல்ல உணவு மற்றும் தூக்கத்தின் பங்கினை மாணவர்களுக்கு புரிய வைத்தல்.

❖ தேர்வை கூறி மிரட்டாமலிருத்தல்.

❖ மாணவர்களுக்கு தேவையான வகுப்பறைச் சூழலை உறுதி செய்தல்.

❖ பொறுமையாக ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் அதாவது அவனது குடும்பம், ஊர், பிண்ணனி, வலிமை, ஆர்வம் என்ன என்பதனை தெரிந்து கொள்ளுதல்.

- உங்களுடைய எந்தசெயலும் மாணவர்களை பாதிக்காத வண்ணம் செயல்படுத்துதல்.
- மாணவர்களுடைய ஒவ்வொரு சின்ன வெற்றிக்கும் அவர்களுடைய நல்ல செயலுக்கும் தாராளமாக பாராட்டுங்கள்.
- மாணவர்களிடம் ஒழுக்க குறைபாடு இருப்பதை அறிந்தால் அவர்களை தனியே அழைத்து கூறவும். இதனால் மற்ற மாணவர்கள் முன் தன் சுயமரியாதையை இழந்ததாக அவன் கருத வாய்ப்பில்லை.
- சமூக செயல்பாட்டில் அவனை பங்கேற்க செய்வது மிக அவசியமானதாகும்.
- உடல் செயல்பாடுகளான விளையாட்டு, உடற்பயிற்சி போன்றவற்றில் மாணவர்களை பங்கேற்கச் செய்வது.
- தவறான பதிலைக் கூறினால் அதற்கு சரியான பதிலை அவன் தெரிந்து கொள்ள வழிவகை செய்தல்.

## 5. ஆசிரியரின் சுய பரிசோதனைக்கான கேள்விகள்

1) எனது வகுப்பில் படிக்கும் அனைத்து மாணவர்களின் பெற்றோர், அவர்களுடைய தொழில், குடும்பப் பிண்ணனி எனக்குத் தெரியுமா?
2) எனது வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு உள்ளதா?
3) எனது வகுப்பறையில் மாணவர்கள்அறிக்கை பலகையினை ஒவ்வொரு நாளும் உபயோகப்படுத்துகின்றனரா?
4) வண்ணமயமான படங்கள், குறிப்புகள், செய்தித்துண்டுகள் எனது வகுப்பறையில் உள்ளதா?
5) எனது வகுப்பறை சுத்தமாக மற்றும் சுகாதாரமாக அமைந்திருப்பதை நான் தினமும் உறுதி செய்கிறேனா?
6) கதை, கட்டுரை, கவிதை என மாணவர்களுக்கு பிடித்தமானவைகளை வகுப்பறை சுவர்களின் ஒட்ட ஊக்கப்படுத்துகிறேனா?
7) மாணவர்கள் ஒவ்வொருவரின் பெயரைக் கூறி அழைக்கிறேனா?
8) மாணவர்களின் கற்றல் செயல்பாடு குறித்து பெற்றோர்களுடன் கலந்து உரையாடியிருக்கிறேனா?
9) பள்ளியை மேம்படுத்த ஊர் பெரியோர்களுடன் பேசியிருக்கிறேனா?
10) களப்பயணமாக அருகிலிருக்கும் வயல், தபால் நிலையம், இரயில் நிலையம், போன்ற பகுதிகளுக்கு அழைத்துச் சென்றியிருக்கிறேனா?
11) மாணவர்கள் என்னைக் கண்டால் மகிழ்ச்சி கொள்கின்றனரா?
12) ஒவ்வொரு பாடவேளைக்காகவும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் செலவு செய்து தயாரிப்பு செய்கிறேனா?
13) ஒவ்வொரு வகுப்பும் புதுமையானதாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேனா?
14) செய்து கற்றல் மூலம் மாணவர்கள் பயில உதவி செய்கிறேனா?
15) கற்றல் கற்பித்தல் பொருள்களை பயன்படுத்தி கற்பித்தல் செயலில் ஈடுபடுகிறேனா?

16) மாணவர்களை வாசிப்பு மூலை, கணித மூலை, அறிவியல் மூலை போன்றவைகளை ஏற்படுத்த ஊக்கப்படுத்தியிருக்கிறேனா?

17) மாவணர்களுடன் அமர்த்து புத்தகம் வாசிக்கிறேனா?

18) மாணவர்களுடன் இணைத்து விளையாடுகிறேனா?

19) கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளின் மாணவர்களை முழுமையாக ஈடுபட அனுமதித்திருக்கிறேனா?

20) மாணவர்களை எந்த நேரமும் புன்முறுவலுடன் வரவேற்கிறேனா?

21) மாணவர்கள் தவறு செய்தால் அவர்களை தனியே அழைத்து ஆலோசனை வழங்குகிறேனா?

22) சிறப்பாக செயல்படும் மாணவர்களை உடனுக்குடன் பாராட்டுகிறேனா?

23) பள்ளியைச் சுற்றியுள்ள மக்கள் என்னை அறிந்திருக்கின்றனரா?

24) ஊர் மக்களுடன் இணைந்து பள்ளியை மேம்படுத்த ஏதேனும் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறேனா?

25) கோபம் மற்றும் கடுஞ்சொற்களால் அல்ல அன்பால் மாணவர்களிடத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று நம்புகிறேனா?

26) எனது வகுப்பில் குழு விவாதம், கருத்தரங்கம் போன்றவற்றிற்கு இடம் தருகிறேனா?

27) மாணவர்கள் என்னுடன் இருப்பதை விரும்புகிறார்களா?

28) மாணவர்களை பாராட்டுவதில் மிகுந்த தாராளத்துடன் செயல்படுகிறேனா?

29) வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறேனா?

30) என்னை கண்டாலே மாணவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வார்கள் என்பது போன்று செயல்படுகிறேனா?

31) மாணவர்களுக்கு நானே சிறந்த முன் மாதிரி என்ற தன்னம்பிக்கை என்னிடம் உள்ளதா?

32) நான் படித்த சிறந்த கதை, கவிதை, குறிப்புகளை மாணவர்களிடம் பகிர்த்து கொள்கிறேனா?

33) மாணவர்கள் பாடவேளையின் போது தங்களுக்கு எழும் சந்தேகங்களை கேட்பதற்கு உரிமை வழங்கியிருக்கிறேனா?

34) மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் விளக்கம் அளிக்கிறேனா?

35) தெரியாத ஒன்றை மாணவன் சந்தேகம் கேட்டால் அவனை கடிந்து கொள்ளாமல் தெரிந்து கொண்டு வந்து கூறுகிறேன் என்று கூறும் துணிச்சல் என்னிடம் உள்ளதா?

36) மாணவர்கள் கற்றல் கற்பித்தலின் போது முழுமையாக பங்கு பெற ஏதுவகை செய்கிறேனா?

37) வகுப்பறையில் கணினியை பயன்படுத்துகிறேனா?

38) பவர் பாயின்ட், ஸ்மார்ட்க்ளாஸ், காணொளி மூலம் பாடம் நடத்துகிறேனா?

39) மாணவர்களையும் கணினியைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறேனா?

40) என்னிடம் படிக்கும் மாணவர்களின் பிரச்சினையை உணருகிறேனா?

41) அவ்வப்போது மாணவர்கள் என்னிடம் மனம் விட்டுப் பேச அனுமதிக்கிறேனா?

42) மாணவர்கள் தன் குடும்ப பிரச்சினையைக் கூட என்னிடம் பகிர்ந்து கொள்கின்றனரா?

43) வாழ்க்கையில் ஜெயித்தவர்கள் பலரின் கதைகளை மாணவர்களிடம் கூறுகிறேனா?

44) மாணவர்களை எனது குழந்தைகளாக எண்ணுகிறேனா?

45) மாணவர்களை பலவித போட்டிகளில் பங்குபெற ஊக்கப்படுத்துகிறேனா?

46) எனது அறிவை அடிக்கடி மேம்படுத்துகிறேனா?

47) மாணவர்களின் அறிவை மேம்படுத்த பலவித செயல்பாடுகளில் ஈடுபட செய்கிறேனா?

48) உணவு, நீர், உறக்கம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்தியிருக்கிறேனா?

49) எல்லா செயல்பாடுகளிலும் மாணவர்களையே முன்னிலைப் படுத்துகிறேனா?

50) கற்றல் செயல்பாடுகளில் பின் தங்கிய மாணவர்களையும் மற்ற மாணவர்களைப் போல் சமமாக நடத்துகிறேனா?

51) அதிகப்படியான எனது நேரத்தை கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்காக செலவு செய்கிறேனா?

52) அவர்களுக்குத் தேவையான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்குகிறேனா?

53) குழுக்கற்றலில் ஈடுபட மாணவர்களை உற்சாகப் படுத்துகிறேனா?

54) மாணவர்களின் முன்னேற்றமே எனது கடமை என்பதனை உணர்ந்திருக்கிறேனா?

55) அனைத்து மாணவர்களையும் முன்னேற்றுவேன் என்ற தன்னம்பிக்கை என்னிடம் உள்ளதா?

## 6. மேற்பார்வை நூல்கள் (REFERENCES)

Teacher and School. Course material for B.Ed., New Delhi: Indira Gandhi National open University.

Choudhury, Namitha Roy, Management in Education New Delhi: APH Publishing corporation, 2001.

Tassoni, Penny. Certificate in Child care and eduction (2nd Edn.) Oxford: Heinemann Eductional Publishes, 2000.

Kamala Arora, "Differences between effective & Ieffective Teachers". New Delhi: S.CHAND & Company Ltd., 1978.

Vijaya Kumari Kawshik & Sharma S.R. "Art of Teaching" New Delhi: Anmol Pub Ltd, 2002.

http://m.huffingtonpost.in/amp/2017/04/21/this-govt-school-teacher-in-tamil-nadu-sold-off-her-jewellery-t_a_22048878/

http://www.csun.edu/~acc50786/Education.html

https://googleweblight.com/i?u=https://en.m.wikipedia.org/wiki/Teacher&s=1&hl=en-IN

http://ec.europa.eu/dgs/education_culture/repository/education/policy/strategic-framework/doc/teacher-competences_en.pdf

https://www.ukessays.com/essays/education/the-relationship-between-teachers-and-students-education-essay.php

https://en.m.wikipedia.org/wiki/Kothari_Commission